கடலூர் கிழக்கு மாவட்டம், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், காட்டுமன்னார்கோவில், மணியன் மஹாலில், மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையேற்று சிறப்புரையாற்றினார். தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், மாவட்ட துணை செயலாளர் அ.ஞானமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். மண்டல பொறுப்பாளரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான அப்துல் மாலிக் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு உரையாற்றினார்.

சென்னை நீச்சல் குளத்தில் மூழ்கி

உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 28-

சென்னை நீச்சல் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறியதுடன் நிதி உதவியும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நீச்சல் குளத்தில் நேற்று முன்தினம் (26.8.2023) மதியம் குடும்பத்தினருடன் நீந்துவதற்கு வந்த பள்ளிக்கரணை பகுதியைச் சேர்ந்த அனிருத் என்ற ஐந்துவயது சிறுவன் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

சிறுவனின் இறப்பு குறித்து துறை ரீதியான விசாரணை நடத்திஉரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளேன்.

சிறுவன் அனிருத்தை இழந்துவாடும் அவரது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் 'கலைஞர் மு.கருணாநிதி' நூல்!

கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்!

முனைவர் ம.இராசேந்திரனுக்கு கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்து!

சென்னை, ஆக. 28-

'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரனின் கைவண்ணத்தில் 'கலைஞர் மு.கருணாநிதி' நூலை சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ளது.

இந்நிகழ்வையொட்டி, இந்நூலினை எழுதிய முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரனுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய வாழ்த்துக் கடிதத்தில், "படைப்பின் வழி, கலைஞரின் பன்முக அடையாளத்தை பறைசாற்றி, கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியுள்ள வாழ்த்துக் கடிதம் வருமாறு:-

அன்புத் துணைவேந்தர் அவர்களுக்கு,

'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் உங்கள் கைவண்ணத்தில் சாகித்ய அகாடமி வெளியிட்ட 'கலைஞர் மு.கருணாநிதி' நூல் படித்தேன்.

கலைஞரின் தவிர்க்க முடியாத பரிமாணங்களையெல்லாம் பதிவு செய்திருக்கிறீர்கள்.

128 பக்கங்களில் சங்குக்குள் சமுத்திரத்தை அடக்கும் முயற்சி இது.

கலைஞரின் பரந்த படைப்பாளுமையை இதைவிடவும் இரத்தினச் சுருக்கமாக வடித்துவிட முடியாது.

கலைஞர்பால் பேரன்பும் அவர் படைப்புக்களை உள்வாங்கும் உளமும் நுண்மாண் நுழைபுலமும் மிக்கவர்க்கே அது சாத்தியம்.

உங்கள் அறிவின் உரத்துக்கும் ஆராய்ச்சித் திறத்துக்கும் இந்நூல் ஓர் இனிய சான்று.

இப்படைப்பின்வழி, கலைஞரின் பன்முக அடையாளத்தைப் பறைசாற்றிய தங்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

கலைஞருக்குக் கடமையாற்றிய உங்களை வாழ்த்துகிறேன்.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து, தனது வாழ்த்துக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சியாகக் கொண்டாடுவோம்!

தி.மு.க. வர்த்தகர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக.28-

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் (25.8.2023-வெள்ளிக்கிழமை) அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகளான திண்டுக்கல் ஜெயன், கோவை முருகவேல், நாமக்கல் மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ., உமரிசங்கர், தாமரை பாரதி, பாண்டிசெல்வம், வி.பி.மணி, வி.எஸ்.ராமகிருஷ்ணன், மீஞ்சூர் பாஸ்கர், தர்ம செல்வன், சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் விஜயராஜ் நன்றியுரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

தங்கத்தை தன் கால்களால் தள்ளிவிட்டு, தவிடுகளை தன் உதடுகளில் ஒட்ட வைத்துக் கொள்ளும் கோவில் மாடப் புறாக்களை போல் தாய் அமைப்பு உள்ளிட்ட எத்தனையோ அணி இருந்தும், கலைஞரின் இதயம் குளிர்ந்த தமிழர்களின் பாரம்பரிய நிகழ்ச்சிகளை "கலை இரவை" வர்த்தகர் அணியான எங்களுக்கு வழங்கிய காரிருட்டைப் போக்க வந்த கதிரவனாம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அண்ணலாம் அறக்கடலாம், ஆடவர்க்கு நிகராகப் பெண்ணுரிமை ஓங்க வைத்த பெருமகனாம் கலைஞரின் புகழ் தாங்கும் கலை இரவை கொண்டாட தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தூத்துக்குடி, மதுரை, திருச்சி, வேலூர் உள்ளிட்ட ஐந்து நகரங்களில் அக்டோபர் முதல் பிப்ரவரிக்குள் நடத்துவது என்றும், அதற்கு வசதியாக ஒவ்வொரு நகரத்திற்கும் 13 மாவட்டங்கள் பிரிப்பது என்றும், அதற்கான மாவட்ட வர்த்தகர் அணி தலைவர்கள் - அமைப்பாளர்கள் அறிவிக்கப்படுவதுடன், அந்தக் குழுவுக்கு தலைமையாக மாநில நிர்வாகிகளை நியமிப்பது என்றும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.

தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளான பறையாட்டம், சிலம்பாட்டம், கோலாட்டம், வில்லுப்பாட்டு மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான நாடகங்களை நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் உள்ளூர் காவல் படைகளுடன் - காவல்துறை ஆதரவையும் கேட்டு, உறுதிப் படுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

சிந்தும் ஒளிச்சுடராம் - சிந்தையெல்லாம் நிறைந்த அருட் செல்வராம், ஏருழவர் சந்தை எல்லாம் புகழ் எதிரொலிக்கும் தலைவர் கலைஞர் புகழ் தாங்கும் கலை இரவு குறித்து விளம்பரச் சுவரொட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

புத்துணர்வு தமிழர் பெறப் பூபாளம் இசைத்தவராம் சொல்லாததையும் செய்த கலைஞரின் புகழ் தாங்கும் கலை இரவு நிகழ்ச்சிகளுக்கு சிறப்பு விருந்தினராய் கலைத் துறை சார்ந்த சான்றோர்களை அழைத்து பாரம்பரிய கலைஞர்களை கௌரவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

"கலை இரவு" நிகழ்வை எந்தெந்த தேதிகளில் நடத்துவது என அந்தந்த மாவட்ட தலை நகரங்களில் செய்தியாளர் கூட்டம் நடத்தி, தலைமை அனுமதியுடன் அறிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஜி.எஸ்.டி. வரி அபராதத் தொகை குறைத்திடுக!

வணிகர்களை கசக்கி பிழியும் ஒன்றிய அரசின் ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் கதவு இல்லம் தவறுதலாக அச்சானால் கூட, ஐம்பதாயிரம் அபராதம் என்பதை 500, 1000 என சிறிய அபராதத்தை தந்திட வேண்டுகிறோம். தஞ்சமென வந்தவர்க்கும் தருநிழலாய் வாய்த்த வள்ளலாம் தங்கத்தளபதி அவர்களின் வழிகாட்டுதலில் தொழில் சம்பந்தப்பட்ட ஆணைகளை தமிழில் வெளியிட வேண்டுகிறோம். சிறு வியாபாரிகளுக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தால் தமிழிலும் ஆணைகள் வெளியிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் தொழில் நிறுவனத்திற்கு உரிமை வழங்குதல் என்கிற மாநகராட்சி நடவடிக்கையை, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என எளிமைப்படுத்திட இக்கூட்டம் வேண்டி கேட்டுக் கொள்கிறது.

செங்கரும்பின் எழுத்தழகாய் தேன்மேடைப் பேச்சழகாய் மங்காத காவியமாய் மனங்கவரும் ஓவியமாய் இந்தியர்களின் அறிவாலயமாய் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருப்பெயரை எழும்பூர் ரயில் நிலையத்துக்கு சூட்ட வேண்டுமென ஒன்றிய அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தில் வணிகம் செய்த வணிகர்களின் சில வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அந்த வழக்குகளை வணிகர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில், சமாதான திட்டத்தை ஏற்பாடு செய்த தமிழ் நாடு அரசையும், தமிழ்நாடு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுவதோடு, இக்கூட்டம் நன்றி கூறுகிறது. அதேநேரத்தில், இதற்குகூட ஒப்புதல் தராமல் இழுத்தடித்து, கண்ணியக்குறைவான செயலில் ஈடுபடும் ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.ரவி அவர்களுக்கு இக்கூட்டம் தனது கண்டத்தை தெரிவித்துக் கொள்கிறது.

காற்றோடு கத்தி சண்டையும், நிழலோடு மல்யுத்தமும் செய்வது போல, இல்லாத அதிகாரத்துக்கு துண்டு விரிப்பது போல, குடியரசுத் தலைவரிடம் சென்ற நீட் ரத்து சட்ட விவகாரத்தில் தலையிட்டு, தமிழர்களின் நலனுக்கு கேடு செய்திடும் தமிழர்களின் விரோத ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.ரவியை இக்கூட்டம் கண்டிக்கிறது. கறந்தபால் மடி புகாது, கவர்னரை விட்டுப் போன அதிகாரத்துக்கு கவர்னர் ஆசைப்படக்கூடாது. அதிலும் கெட்ட எண்ணத்தோடு கூட்டத்தில் கதறக் கூடாது.

தமிழர்களின் பிள்ளைகளை மருத்துவராக்கி மகிழ்வதற்காக - நீட்டை ஒழிக்க வேண்டுமென்று தன் உடலை வருத்தி, ஒரு சொட்டு தண்ணீர்கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்ததுடன், ஒன்றிய அரசினை எதிர்த்து ஓங்கி குரல் எழுப்பி, கலைஞரின் போராட்ட குணத்தினை நினைவுபடுத்திய இன்றைய இளைஞர்களின் எதிர்காலமாய், நீடுபுகழ்க் கவிஞருக்கும் நிலைத்த புகழ் அறிஞருக்கும் பாடு பொருள் ஆனவராம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களை, இக்கூட்டம் வாழ்த்துவதோடு, பாராட்டி மகிழ்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன.

விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு அறிவிப்பு

விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் 30-08-2023 புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் விருதுநகர் கந்தசாமி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் வி.தங்கராஜ், எஸ்.செல்வமணி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். பொருள் : கழக இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் பொற்கிழி வழங்குதல் சம்பந்தமாக.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்
செயலாளர், விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க.

அமைச்சர் தங்கம் தென்னரசு
செயலாளர். விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.

திருச்சி மாவட்டக் கழக முன்னோடி

வீகேயென் பாண்டியன் மறைவு!

அமைச்சர் கே.என்.நேரு - முன்னணியினர் அஞ்சலி!

திருச்சி, ஆக. 28 -

திருச்சி மாவட்டக் கழக முன்னோடி வீகெயென் பாண்டியன் என்கிற ஆ. பொன்னு பாண்டியன் (வயது 68) கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து அமைச்சர் கே.என்.நேரு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து திராவிடர் கழக தலைமை நிலைய செயலாளர் வீ அன்புராஜ். மாவட்ட செயலாளர் காடு வெட்டி ந.தியாகராஜன். மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி, மேனாள் முதல்வர் மக்கள் தொடர்பு அலுவலர் ஓய்வு மதுரை மருதவிநாயகம், தொழிலதிபர் வீகேயென் கண்ணப்பன் (எ) நாராயணன், வி.எஸ்.பி. இளங்கோவன், மண்ணச்சநல்லூர் த.காளியப்பன், திருச்சி திருமலைவாசன், திருச்சி சின்னசாமி , மேயர் மு.அன்பழகன், எஸ் ஏ அம்பிகாபதி, பானுமதி கண்ணன், மனோகரன், முரசொலி சேது குடும்பத்தினர், முரசொலி ராஜேந்திரன், தொழிலதிபர் வீகேயென் ராஜா, மண்ணச்சநல்லூர் ஸ்ரீதர் , கே. பி. ஏ. செந்தில் , செந்தில்குமார், ரவிகுமார், தங்காத்தாள், திருச்சி பெரியார் மாளிகை சுப்ரமணியன், மதுரை அன்பு, திருப்பூர் நாச்சிமுத்து,. பாலு, திருமங்கலம் பரமன், தினகரன் முகமது மீரான், நைனா முகமது சென்னை, திருச்சி உசேன், பென்னமராவதி பழனியப்பன், செவலூர் குணசேகரன், திருவரங்கம் சீனிவாசன், விஜயராமன், நாராயணன் , எஸ் ஆர் எம் சம்பத்குமார் குடும்பத்தினர்,

குமரன், புளு மெட்டல் பிரபாகரன், செல்வம், மாநிலத் தலைவர் இருசக்கர வாகன பழுது நீக்குவோர் சங்கம், பி.எச்.இ.எல். சவரிமுத்து, சுந்தர் ராஜன், சந்திரசேகரன், விஜயகுமார், தனபால், பி. எச். இ. எல். மேலாளர்கள், கோபண்ணா, பாலசுப்ரமணியம், ஐவான், பிரசன்னா, வேலா, வடிவேல், சக்திவிலாஸ், வெங்கடேசன், மெடிக்கல் கிருபானந்த மூர்த்தி,

ஜூவல்லரி மனோகரன், தாமரை பேப்பர்ஸ் சுரேஷ், டாடா பைனான்ஸ் சுந்தர், பங்க் கண்ணன் (எ) கோவிந்த ராஜுலு, பசீர் அகமது, தேவராஜ், ராஜேந்திரன், ராதாகிருஷ்ணன் ராஜேந்திரன், சரவணன், அன்பழகன், சம்பத், வீகேயென் ஊழியர்கள் நமச்சிவாய மூர்த்தி, உதயகுமார், ஆனந்த்,

மண்ணச்சநல்லூர் நகர நிர்வாகிகள் சி.ஜெயபாலன், மனோகரன், ராஜேந்திரன், இளங்கோவன், கார்த்திகேயன், பாலமுருகன், கண்ணன், தர்மலிங்கம், லட்சுமி, தேவதாஸ், மணிமாறன், செந்தில் வேலன், சிவகுமார், உதயகுமார், சந்திரசேகர், சிவா, ராஜாராம், இலக்கிய ராஜன், ரெங்கராஜ், சிவசுப்ரமணியன், மகேந்திரன், கண்ணன், சித்தன், ராமரத்தினம், இளைஞரணி மருது சேகர், காரல் மார்க்ஸ், முருகானந்தம், சுகுமார் அசோகன், காசிசரவணன், மண்ணை சரவணன், கதிரேசன், செந்தில், சிவலிங்கம், சுப்ரமணியன், ஐ ஒ பி ரவி, பாலு, திருப்பைஞ்ஞீலி ஜெகநாதன், சண்முகம், பவித்ரம் ஆசைதம்பி, திண்டுகல் ராணி நாகரத்தினம், வாத்தலை சுந்தர்ராஜ், கரூர் தண்டபாணி, சீனிவாசன். செல்வராஜ், மன்ற உறுப்பினர்கள் சக்திவேல், அமுதா, ராதாகிருஷ்ணன், ராஜா, சந்திரசேகர், அரிமா சங்க நாகராஜன், மோகன்ராஜ், டென்சிங், ஆறுமுகம், எம் என் பாலு, சத்தியமூர்த்தி, பிரவீன்குமார், கார்த்தி, ராஜேஷ், சமயபுரம் பேரூராட்சி தலைவர் சரவணன், கவுன்சிலர்கள் பிரவீன், குட்டி வசந்த்ராஜ் சமயபுரம் நகர நிர்வாகிகள் துரை. ராஜசேகரன், சுரேஷ், பெரியார் செல்வம், துரைபிரபு, வீரமணி, பாலசுப்ரமணியன், சேதுலெட்சுமணன், சேதுராமன், முருகன், சிவாமாரியப்பன்,

தந்தை பெரியார் தி. க. சீனி விடுதலை அரசு, திருவரங்கம் சிவாஜிசண்முகம், காங்கிரஸ் வில்ஸ்முத்துகுமார், ரவீந்திரன், ஞானகுரு, முகுந்தன், திருச்சி ஜீவானந்தம், முரளிசாந்தி, தனசேகரன், குருநாதன், பால் ஜெயசேகரன், மணிகண்டன், ஆண்ட்ரூ, சீனிவாசன், அண்ணா துரை, ஸ்ரீராஜ் வசந்தகுமார், ராஜ்குமார், பிரபு, அஜந்தா நாகராஜ், குணா, செந்தண்ணீர்புரம் பாஸ்கரன், செந்தில், சரவணன், கிழக்குறிச்சி விஸ்வநாதன், ராஜு, லோகநாதன், மோகன், கிருஷ்ணமூர்த்தி

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி ஊழியர்கள் அழகேந்திரன், தேன்மொழி, கிருஷ்ணமூர்த்தி, பார்கனி, பழனியாண்டி, கணேசன், சுரேஷ்குமார், சதீஸ், பாண்டியன், சரவணன், அமுதா, பூபதி, பழனியப்பன், விஸ்வநாதன், சாந்தி, தமிழரசன், ராஜு, புவனேஸ்வரி மற்றும் தூய்மை பணியாளர்கள் , மாநில சோழிய வேளாளர் சங்க நிர்வாகிகள் தங்கம் ரெத்தினகுமார், டைமன் பாலு, பேரா.கங்கைமணி, திருநாவுக்கரசு, மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.

மதுரை ரயில் தீவிபத்தில் பலியானவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ரூ3லட்சத்திற்கான காசோலையினை பாதிக்கப்பட்டவர்களிடம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் ஆறுதல் கூறி வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாநகராட்சி ஆணையாளர் பிரவின்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

30ஆம் ஆண்டு நினைவு நாள்

காஞ்சிபுரம் **கே.டி.எஸ்.மணி**

மறைவு – 28.8.1993

★★★

இறுதி மூச்சு உள்ள வரை

பெரியார், அண்ணா, கலைஞர்

வழி நின்ற சுயமரியாதைச் சிங்கம்!

தம் உடலைத் தானம் செய்து

புகழுலகின் உச்சிக்கே சென்றுவிட்ட உத்தமர்!

அ.இராமமூர்த்தி – இரா.அருளரசன்

உறவினர்கள், நண்பர்கள்.

(வி.ம்)